
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 10.10.2024 வியாழக்கிழமை இதழ் : 284 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## உடைந்தது தமிழ் அரசு கட்சி!

# வெளியேறிய அதிருப்தி குழு தேர்தலில் தனித்துப் போட்டி!

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 10

**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலால் அதிருப்தியடைந்த அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சுயேச்சை குழுவாக போட்டியிடவுள்ளனர் என்று தெரிய வருகின்றது. ஜனநாயக தமிழ் அரசு என்ற பெயரில் இந்த சுயேச்சைக் குழு தேர்தலில் களமிறங்கவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.**

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய இலங்கை தமிழ் அரசுக் கட்சி இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுகின்றது. அண்மைநாட்களாக அந்தக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்குழு வவுனியாவில் கூடி வேட்பாளர்களை தெரிவு செய்தது. வேட்பாளர்கள் தெரிவில் கட்சியின் உறுப்பினர்கள் பலருக்கும் அதிருப்தி ஏற்பட்டது. குறிப்பாக, யாழ். மாவட்ட வேட்பாளர்கள் தெரிவில் கடும் அதிருப்தி ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்கள் தெரிவால் 11




## ஜ. த. தே. கூட்டணி வேட்புமனு தாக்கல்!

யாழ்ப்பாணம், ஒக். 10

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்தது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி திருகோணமலை தவிர வடக்கு, கிழக்கின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடுகின்றது.

இதில், யாழ். மாவட்டத்துக்கான வேட்பு மனுவை கூட்டணியின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தன் யாழ். மாவட்ட 11

## ரயில் மோதி ஒருவர் பலி!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், ஒக்.10

கடவை இல்லாத இடத்தில் புகையிரத பாதையை கடந்த குடும்பஸ்தர் ஒருவர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்தார். சுன்னாகத்தில் நேற்று புதன்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில், அளவெட்டி - குருக்கள் 11

ஐ. நா. மனித உரிமை பேரவையில்

# இலங்கை தொடர்பான தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்!

ஜெனிவா, ஒக். 10

இலங்கை அரசாங்கம் நிராகரித்த போதிலும் 51/1 தீர்மானத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடித்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நேற்று புதன்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை வளர்ப்பதை இலக்காகக் கொண்ட இந்தத் தீர்மானமே மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர் வரை இந்த காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமானது. அன்றைய தினமே இலங்கை தொடர்பான விவகாரம் விவாதத்துக்கு எடுக்கப் பட்டிருந்தது. முன்னதாக, 11

## இலங்கை தமிழ் அரசு கட்சி கொழும்பில் போட்டியிடாது!

பதில் செயலாளர் சத்தியலிங்கம்

- சசிகலாமீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை
- விலகியோரின் கடிதங்கள் கிடைக்கவில்லை

வவுனியா, ஒக். 10

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கொழும்பில் போட்டியிடாது என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ப. சத்தியலிங்கம் அறிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான நியமனக் குழு நேற்று வவுனியாவில் கூடியது. இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட பொதுச் 11

## தமிழ் அரசு கட்சி இன்று வேட்புமனு தாக்கல்!

யாழ்ப்பாணம், ஒக். 10

இலங்கை தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனுவை இன்று வியாழக் கிழமை தாக்கல் செய்யவுள்ளது.

இதேநேரம், வன்னி, அம்பாறை மாவட்டங்களுக்கான வேட்பாளர்கள் தெரிவு இறுதியாகிவிட்டதாகவும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கான வேட்பாளர்கள் தெரிவு இன்னமும் 11




## தமிழ் மக்கள் கூட்டணி வேட்புமனுத் தாக்கல்!

யாழ்ப்பாணம், ஒக். 10

தமிழ் மக்கள் கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் மணிவண்ணன் தலைமையிலான வேட்பாளர்கள் நல்லூரிலுள்ள தியாகதீபம் திலீபன் நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்திய பின்னர், நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபட்டு, யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். (ஐ)

## மன்னார் மனித புதைகுழி 'ஸ்கான்' மூலமாக ஆய்வு!

மன்னார், ஒக். 10

மன்னார் மனிதப் புதைகுழி ஸ்கான் மூலம் நேற்று ஆய்வு செய்யப்பட்டது.

மன்னாரின் புகழ்பெற்ற தலமான திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு செல்லும் பாதையில் சதொச கட்டடம் அருகே 2014ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. 80 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் இந்தப் புதை குழி அகழ்வு பணி நீண்டகாலமாக 11

## தமிழ் அரசால் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்காது

கஜேந்திரகுமார் சாடல்

யாழ்ப்பாணம், ஒக். 10

தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை தமிழ் அரசு கட்சி மீறி செயல்படுகிறது. எதிர்காலத்தில் அந்தக் கட்சியால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் நடவடிக்கை 11

## தமிழ் மக்கள் கூட்டணி அதிருப்தி குழுவும் போட்டி?

யாழ்ப்பாணம், ஒக். 10

தமிழ் மக்கள் கூட்டணியின் அதிருப்திக் குழு ஒன்று சுயேச்சையாக தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிய வருகின்றது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் க. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி தனித்துப் போட்டியிடுகின்றது. முன்னதாக, அந்தக் கட்சியின் வேட்பாளர் தெரிவின்போது அந்தக் கட்சிக்குள் இரு வேறு நிலைப்பாடுகள் 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஆய்வாளர் நிலாந்தன் மேடைகளில் பேசுகின்றபோது அடிக்கடி சொல்லுவார், "தமிழ் மக்கள் அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டைபோல சிதறுண்டு கிடக்கிறார்கள்" என்று.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தி அவற்றை சிதறாமல் பார்க்க எடுத்த முயற்சி ஓரளவுக்கு வெற்றியளித்த போதிலும், அது தொடர்ச்சியாக பேணப்படாததால் மீண்டும் சிதறிக்கொண்டிருக்கின்றது. அதிலும், முன்னரைப்போல அல்லாமல் இன்னும் இன்னும் மோசமாக சிதறிக்கொண்டிருக்கின்றது.

ஒப்பீட்டடிப்படையில் தமிழ்த் தேசியக் கட்சி என்று சொல்லத் தகுதி உள்ள கட்சியாக- இருந்தது தமிழ் அரசு கட்சிதான்.

ஒரு கட்சியை தேசியக் கட்சி என்கின்றோம் என்றால் அது தமது தேசம் முழுக்க கிளைகள் பரப்பி விருட்சமாக இருக்கவேண்டும். ஆனால், நமது தமிழ்த் தேசியக் கட்சிகள் என்பவை வெறுமனே தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகளாக மட்டுமே இருக்கின்றனவே தவிர, தமிழர் தேசம் எங்கும் கிளை பரப்பி வலுவான கட்டமைப்புடன் இல்லை. ஒப்பீட்டடிப்படையில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஒன்றுதான் தமிழர் தேசமெங்கும் கட்டமைப்பைக் கொண்ட கட்சி.

ஆனால், அதன் இன்றைய நிலை கட்சியில் எவர், எங்கே இருக்கின்றார்?, எந்த அணியில் இருக்கிறார்?, இப்போதும் அந்தக் கட்சியில்தான் இருக்கின்றாரா? என்று கேட்க வேண்டியிருக்கின்றது.

பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் நடந்த தமிழ் அரசு கட்சியின் முதலாவது மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை படித்தபோது, கட்சி நிச்சயம் இரண்டாக உடையப்போகின்றது என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. அதற்காகக் கட்சி ஏற்கனவே இரண்டாக அல்லாமல் ஒன்றாகவா இருந்தது என்று நீங்கள் கேட்கலாம். அதுவல்ல, ஒரு கட்சிக்குள்ளேயே இரண்டு அணிகளாக அல்லாமல் தனித்தனிக் கட்சிகளாக - ஒவ்வொருவரும் தாங்கள்தான் தமிழ் அரசு என்று சொல்லிக்கொண்டு இரண்டு கட்சிகளாகத் தேர்தலை எதிர்கொள்வார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அப்படி நடந்துவிட்டால், சிறீதரன் தனித்து போட்டியிட்டால் அவர் மூலம் கட்சிக்குக் கிடைக்கின்ற வாக்குகள் கிடைக்காமல் போய்விடும் என்ற எண்ணத்தில் தமது மத்திய குழுவின் முடிவையே வசதிக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டார்கள். அவ்வாறு மாற்றியதால் சமாதானம் அடைந்த சிறீதரனும் தமிழ் அரசில் போட்டியிட முடிவெடுத்தார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரம் வாக்குகளை அப்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றபோது சிறீதரன் பெற்ற விருப்பு வாக்குகள், முப்பத்தி ஐயாயிரம் மட்டுமே. அப்படியெனில், அவருக்காகக் கட்சிக்கு வாக்களித்தவர்கள்- அல்லது கட்சிக்கு வாக்களித்தவர்களில் அவரின் ஆதரவாளர்கள் அதுதான். தனது 'ஆளுமை' யை இப்போது வெளிப்படுத்திவிட்டு- துகில் உரிந்து நிற்கும் அவரால் இப்போதும் அதேயளவு வாக்குகளை பெறமுடியுமா என்பது தெரியவில்லை.

தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் அவரோடு சேர்ந்து நின்றவர்கள் - அவர் தலைவர் பதவிக்காக போட்டியிட்டபோது அவரை ஆதரித்து நின்றவர்களை எல்லாம் தனியாக விட்டுவிட்டு அவர் கட்சியின் வேட்பாளராக போய்விட்ட பின்னர் கவனிப்பாரற்று நின்ற கட்சிக்காரர்கள் எல்லோரும் இப்போது வரிசைகட்டி இணைந்து வருகின்றனர்.

இதனால் தமிழ் அரசு 'பி' அணி ஒன்று தேர்தலில் களம் இறங்கத் தயாராகி வருகின்றது. இன்று அது தொடர்பான அறிவிப்புகள் வெளியாகலாம் அல்லது வேட்புமனு தாக்கல் செய்வதற்கு நாளை கடைசி நாள் என்பதால் - நாளை வெளிவரலாம்.

அப்படியோர் அணி தேர்தலில் களம் இறங்குமென்றால் கட்சியில் ஒரு சிலர் எடுத்த தன்னிச்சையான முடிவுகளை சகித்துக்கொள்ளாமல் கோபத்தில் இருக்கும் கட்சிக்காரர்கள் தமது கோபத்தை வெளிப்படுத்த அந்த 'பாதிக்கப்பட்டவர்கள்' அணியை ஆதரிக்கலாம்.

அந்த அணியோடு சிறீதரன் சேர்ந்திருந்தால் தேர்தல் முடிவு சிலவேளை 'பி' அணிதான் உண்மையான தமிழ் அரசு என்பதையும் வெளிக்காட்டியிருக்கலாம்.

அதுவல்ல இன்று நமது கவனத்தை ஈர்த்தது:

கடந்தமுறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு முடிவுகள் வெளியானபோது, சர்ச்சைக்கு உரியவராக இருந்த சசிகலா ரவிராஜ் இந்தத் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் ஒரு வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். முன்னதாக அவருக்கு நியமனம் வழங்கவேண்டும் என்று தேர்தல் வேட்பாளர் தெரிவுக் குழுவிடம் அதன் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா விண்ணப்பித்திருந்தார் எனவும் அவருக்கு நியமனம் வழங்க வேட்பாளர் தெரிவுக்குழு மறுத்துவிட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. அவருக்கு நியமனம் கொடுக்க மறுத்துவிட்டதால், தமிழ் அரசு தெரிவுக்குழு பெண் வேட்பாளர்கள் போட்டியிட விண்ணப்பிக்கவில்லை என்றும் உடனே விண்ணப்பிக்கலாம் எனவும் பகிரங்க அறிக்கையை வெளியிட்டு மறுநாள் இரு பெண்களை வேட்பாளராக்கியது.

அவ்வாறு வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாக இப்போது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் கடந்த தேர்தலில் மயிரிழையில் தோல்வியடைந்த ஒருவரைத் தவிர்த்து புதியவர்களை சேர்த்துக் கொண்டது எதற்காக என்பது எல்லோராலும் புரிந்துகொள்ளக் கூடியதுதான்.

வேட்பாளர் நியமனம் கொடுக்கின்ற அளவுக்கு கட்சியில் முக்கிய மானவராக இல்லாமல் இருந்த சசிகலாவிடம் இப்போது அவர் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் போட்டியிடுவதைத் தொடர்ந்து அவருக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்று கட்சி பதில் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

தமிழ் அரசுதான் இவ்வாறு நடந்துகொள்கின்றது என்றால், மறுபக்கம் 'அங்கே' இல்லையென்றால் 'இங்கே' என்று போட்டியிடுவதன் மூலம் தன்னையும் வெளிப்படுத்தியிருக்கிறார் என்கிறார் ஒரு தமிழ் அரசுக்காரர்.!

- ஊர்க்குருவி.

## பல்லசுட்டியில் 8 அடி உயரத்தில் அமைந்த சரஸ்வதி சிலை திறப்பு!



யாழ்ப்பாணம், ஒக். 10

பண்டத்தரிப்பு - பல்லசுட்டி பகுதியில் புதிதாக அமைக்கப்பெற்ற 8 அடிகள் உயரம் கொண்ட சரஸ்வதி சிலை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கதிரமலை யோகேஸ்வரன் என்பவரின் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், பல்லசுட்டி காந்தி ஜீ முன்பள்ளி வளாகத்தில் குறித்த சிலை அமைக்கப்பட்டு, நவராத்திரி விரதத்தின் சரஸ்வதிக்கான விரதத்தின் ஆரம்ப நாளான நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இதன்போது விசேட அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் என்பன இடம் பெற்றன.

இந்த சிலை கட்டுடை பகுதியை சேர்ந்த சுப்பிரமணியம் பத்மநாதன் என்ற சிற்ப ஆசாரியாரின் கை வண்ணத்தில் அமைக்கப்பட்டது.

திறப்புவிழாவின் பின்னர் விசேட அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது. (அ-05)

## சந்நிதியான் ஆச்சிரமம் வன்னி, மலையகத்துக்கு ரூ. 385,000 பெறுமதியான உதவிகள் வழங்கல்



வடமராட்சி, ஒக். 10

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையகம் பண்டாரவளை அயிஸ்லெபி தமிழ் வித்தியாலய மாணவர்களின் தேசிய மட்ட நாடக, நாட்டிய போட்டிகளில் கலந்து கொள்வதற்கான நிதிச் செலவுகளுக்காக ரூபா 50 ஆயிரம் நிதியும், பண்டாரவளை சௌதம் தமிழ் மகா வித்தியாலய வாணி விழா நிகழ்வின் அன்னதான பொருள்களுக்காக ரூபா 125,000 நிதியும், பாடசாலை நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டதுடன், வவுனியா மாவட்டம் நெடுங்கேணி பெரியகுளம் பிள்ளையார் ஆலய மீள் கட்டுமானப் பணிக்காக ரூபா 100,000 நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு ரூபா 110,000 பெறுமதியான அத்தியவசிய பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ் உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கினர். (அ-05-02)

## முல்லைத்தீவில் புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வு

முல்லைத்தீவு, ஒக். 10

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகள் காலத்தில் புதைக்கப்பட்டதாக நம்பப்படும் ஆயுதங்களைத் தேடி இரண்டாவது நாளாக நேற்றும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் உள்ள விளையாட்டுக்கழக மைதானத்தில் அகழ்வு பணி இடம்பெற்று வருகிறது.

கொழும்பு நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த அகழ்வுப் பணி கொழும்பில் இருந்து வருகை தந்த பொலிஸ் குழுவினரால் நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டது. அகழப்பட்ட குழிக்குள் நீர் வரத்து அதிகரித்ததால் நேற்று காலை நீர் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. (அ)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வாசிப்பு மாதச் சிறப்பு ஒன்றுகூடல்



யாழ்ப்பாணம், ஒக். 10

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடத்திய வாசிப்பு மாதத்திற்கான சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் அதிதி பேச்சாளராக கலந்து கொண்டார்.

விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி ஷாஜகான் பாத்திமா நுஸ்லா மாணவர் உரையை வழங்கினார்.

பேராசிரியர் மா நடராச சுந்தரத்திற்கான அறிமுக உரையை விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் ஆற்றினார் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் தான் வெளியிட்ட தனது ஒன்பதாவது புத்தகமாக அமைந்த அறிவு சார்ந்த உலகில் கல்வி என்ற நூலின் உள்ளடக்கம் பற்றி எடுத்துக் கூறினார்.

அதிதி பேச்சாளர் கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். ஹாட்லி கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவராகிய பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் தற்போது 79 ஆவது வயதை நிறைவு செய்திருக்கிறார்.

1964 ஆம் ஆண்டு இலங்கை பாடசாலைகளிடையே இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் ஒன்பது போட்டிகளில் கலந்து கொண்டு 1018 ஓட்டங்களை குவித்தவர் 60 விக்கெட்டுகளை சாய்த்தவர். இவர் விளையாடிய காலத்தில் துடுப்பாட்ட வீரருக்கு பாதுகாப்பு கவசங்களோ தலைக்கவசமோ இருக்கவில்லை வன்பந்தை துணிந்து எதிர்கொண்டு விளையாட வேண்டும் அந்த அனுபவங்களையும் தனது பேச்சின் இடையே பகிர்ந்து கொண்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
10.10.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பாடங்களை கற்றுக்கொள்ள தயாராகுங்கள்!

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் வேட்புமனுத் தாக்கலில் மும்முரமாக இருக்கின்றன. கடந்த சில நாட்களாக ஆட்களைத் தேடி அலைந்தனர். ஒவ்வொரு கட்சிகளிலும் யார் போட்டியிட வேண்டும் என்பதை விடவும் யார் போட்டியிடக்கூடாது என்பதில்தான் ஒவ்வொருவரும் கவனமாக இருந்தனர். இரண்டு தடவைகள் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களும் போட்டியிடுகின்றனர். அதிகமானவர்கள் ஒருமுறைகூட, தங்களைத் திரும்பிப் பார்த்ததில்லை - இதனால், தங்களின் பலம் என்ன, பலவீனம் என்ன என்பதை அவர்களால் அறிய முடிவதில்லை. ஆனால், அவ்வாறானவர்கள் அனைவருக்கும் இந்தத் தேர்தல் ஒரு பாடத்தை நிச்சயம் உணர்த்தத்தான் போகின்றது.

அதன் பிறகாவது பாடம் படிப்பார்களா என்பதைப் பார்ப்போம்!

கடந்த காலம் போதிய பாடங்களை புகட்டியிருக்கின்றது. ஆனால், அந்தப் பாடங்களிலிருந்து கற்றுக்கொள்ள எவருமே முயற்சிப்பதாகவோ - ஆகக் குறைந்தது கற்றுக்கொள்ள வேண்டுமென்று எண்ணுவதாகவோ தெரியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஒரு நெருக்கடியான தேர்தலுக்கு அனைவரும் முகங்கொடுத்திருக்கின்றனர். தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளில் அநேகமானவை முதன்முதலாக நீண்ட காலத்துக்கு பின்னர் வீட்டுச் சின்னத்துக்கு வெளியில் போட்டியிடுகின்றனர். வீடு, சங்கு, மான், என்று மோதப் போகின்றனர் - இன்னொருபுறம், வழமைபோல் சைக்கிள் ஓரணியாக நிற்கின்றது.

பெரும்பாலான வேட்பாளர் பட்டியலை நோக்கினால், அதிகமான வேட்பாளர்கள் யாரோ ஒருவருக்கு வாக்குச் சேகரிக்கும் நோக்கத்தில்தான் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். உண்மையில், வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும்போது, அடுத்த மாகாண சபைக்கான தகுதியுள்ளவர்கள் - மாநகர சபை, நகர சபை தலைவர்களாவதற்கான தகுதியுள்ளவர்களை அடையாளம் கண்டு, அவர்களை முன்னிறுத்த வேண்டும். அப்போதுதான் அடுத்த கட்ட தலைமைத்துவத்துக்கான ஆட்களைத் தயார் செய்ய முடியும். ஆனால், இப்படி தூரநோக்கோடு சிந்தித்து செயலாற்றக்கூடிய நிலையில் கட்சிகளின் தலைமைகள் இல்லை. எப்படியாவது தங்களின் தலைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்னும் முனைப்பில் இருப்பதால் தங்களுக்கு சவால் இல்லாதவர்கள்தான் பட்டியலில் இடம்பெறவேண்டும் என்பதில் ஒவ்வொரு கட்சியின் தலைமையும் மிகவும் கவனமாக இருக்கின்றது. தமிழ்த் தேசியம் பேசும் எவருமே இதற்கு விதிவிலக்கல்ல.

இவ்வாறு சிந்திப்பவர்கள் தங்களுக்குள் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும். அதாவது, மூன்று முறை பாராளுமன்றம் சென்று சாதிக்க முடியாமல்போன விடயத்தை இனிப் போய் எவ்வாறு சாதிக்க முடியும்? இலங்கை பாராளுமன்றத்தில் என்னதான் கத்தினாலும் ஒரு கட்டத்துக்கு மேல் எதனையும் செய்ய முடியாது. இந்தநிலையில் முன்னவர்களால் சில விடயங்கள் முடியவில்லை என்றால் ஆட்களை மாற்றி அனுப்புவதுதானே சரியானது. ஆனால், கட்சிகளின் தலைமைகள் அதற்குத் தயாராக இல்லை. மூன்று முறைக்கு மேல் பாராளுமன்றம் செல்ல முற்படுபவர்கள் தமிழ் அரசியலுக்குத் தேவையற்றவர்கள். ஏனெனில், அவர்கள் புத்தாக்கம்மிக்க தலைமைகள் உருவாவதை தடுக்கின்றனர். அரசியலில் புதிய சிந்தனைக்கு வித்திட மறுப்பவர்கள் இனியும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இருப்பதில் பயனில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இந்தத் தேர்தல் பலருக்கு புதிய பாடங்களை புகட்ட இருக்கின்றது. ஒவ்வொருவரின் தரத்தையும் அவர்களுக்கு உணர்த்த இருக்கின்றது. இந்தத் தேர்தல் முடிவில் சில கட்சிகளே அரசியலில் இல்லாமல்போக வேண்டிய தேவையேற்படும். அதேபோல், தாங்கள் இப்போது இருப்பது போன்று இருக்க முடியுமா - இந்தக் கூட்டுகளால் பயனுண்டா என்னும் கேள்விகள் நிச்சயம் எழும். இந்தத் தேர்தல் முடிவுகள் நிச்சயம் அவ்வாறான நிலைமையை ஏற்படுத்தும். ஈழநாடு முன்னரும் சில விடயங்களை எச்சரித்திருக்கின்றது. ஆனால், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை - காலம் தொடர்ந்தும் பாடங்களை போதித்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், அதனை கருத்தில்கொண்டு சிந்திக்கத்தான் எவரும் இல்லை. இந்த அரசியல்போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச் சபையும் அவர்களை நம்பிய மக்களை நடுவீதியில் விட்டுவிட்டு ஓடிஒளிந்து கொண்டது.

# கிளிநொச்சி பண்பாட்டு பெருவிழா இன்று!

கிளிநொச்சி, ஒக். 10

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைகளத்தின் அனுசரணையுடன், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்தும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான எஸ்.முரளிதரன் தலைமையில், கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் திறந்தவெளி அரங்கில் காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஷ் மற்றும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை அதிபர் சு.சுதாஸ்கரன், திருவையாறு கலைக் குரிசில் நா.யோகேந்திரநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக கலாசார பேரவையின் உப தலைவர் கலாபூஷணம் பொன் தில்லைநாதன் (பூநகரி), கரைச்சிப் பிரதேச செயலக கலாசார பேரவை உறுப்பினர் கலாபூஷணம் தேவராசா தியாகராசா, பச்சிலைப்பள்ளி கலாசாரப் பேரவை உறுப்பினர் கலைக் குரிசில் செல்லையா சுந்தரம் பிள்ளை, கலைக்கிளி ஆ. பாலேஸ்வரன் (காசிமணியம்) - கண்டாவளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலைஞராகவும் பல கலைப்படைப்புக்களை ஆற்றி மறைந்த பூநகரி இரணைமாதாநகர் பகுதியை சேர்ந்த அமரர் கலைநகரி சந்தியா புவனேந்திரனை நினைவுறுத்தும் வகையில் அமைக்கப்பட்ட அரங்கில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்வின் போது கலாசார பேரவையினர் மற்றும் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள், சான்றிதழ் வழங்கல், கலைஞர் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

# இன்னிசை கச்சேரி!

வடமராட்சி, ஒக். 10

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வாராந்த நிகழ்வாக கலைஞர் செல்வச்சந்திரன் குழுவினரின் இன்னிசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

ஆச்சிரம பொறுப்பாளர் செ. மோகனதாஸ் சுவாமிகள் திருமுன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ-02)

# கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 10

ஆரோக்கியமான வாழ்க்கை ஆரோக்கியமான தேர்வுகள் என்ற தொனிப் பொருளில் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த கண்காட்சியில் அயலி திரைப்படம் காட்சிப் படுத்தப்படவுள்ளது. அத்துடன், ஆட்காட்டி நாடகம், அவள் நடனம் அன்றைய காலத்து வாழ்வியலும் இன்றைய காலத்து வாழ்வியலும் கருத்தாடல் என்பனவும் நடைபெறவுள்ளன.

மேலும், இலவச நீரிழிவு பரிசோதனை, புற்றுநோய் விழிப்புணர்வு, மாதவிடாய் சுகாதார விழிப்புணர்வு, போசாக்கு விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதகாப்பு, உள்ளூர் உற்பத்திகள் விற்பனை மற்றும் காட்சிப் படுத்தல் புகைப்படக் காட்சி ஆகியனவும் நடைபெறவுள்ளன. (ஐ)

# அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வன்னியில் வேட்புமனு தாக்கல்!



வவுனியா, ஒக். 10


வன்னி தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனுவை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நேற்று தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சைக்கிள் சின்னத்தில் தனித்து போட்டியிடுகிறது.

வவுனியா நகர சபை அருகேயுள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் சென்ற அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து அந்தக் கட்சியினர் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

இதன்போது, வன்னி மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் எஸ். தவபாலன் ஏனைய வேட்பாளர்களுடன் கட்சியின் பேச்சாளர் க. சுகாஷும் உடனிருந்தார். (ஐ-10)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 10 வியாழக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 24
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : அஷ்டமி




**மேடம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் முயற்சிகள் பலிதமாகும். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**மிதுனம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சிலமாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**கன்னி**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். சொத்துப் பிரச்னைக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்து கொண்டிருக்காதீர்கள். சக ஊழியர்களால் டென் ஷன் ஆவீர்கள். தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டும்.

**மகரம்**
குடும்பத்தில் விட்டு கொடுத்துபோவது நல்லது. சகோதர வகையில் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமையான நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். புது தொழில் தொடங்குவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். கடமையுணர்வுடன்செயல்பட வேண்டும்.


# யாழ்ப்பாணம் கடத்திவரப்பட்ட 20 மாடுகள் பொலிஸாரால் மீட்பு

தென்மராட்சி, ஒக். 10

கிளிநொச்சியிலிருந்து சட்டவிரோதமாக யாழ்பாணத்துக்கு லொறியில் கடத்தி வரப்பட்ட 20 மாடுகளை பொலிஸார் மீட்டுள்ளனர். அத்துடன், இருவரை கைது செய்தனர்.

கடந்த திங்கட்கிழமை மீசாலை பகுதியில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த லொறியை மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, அந்த லொறியில் 20 மாடுகள் அடைக்கப்பட்டிருந்தமையை கண்டனர். இந்த மாடுகள் சட்டவிரோதமாக கடத்திவரப்பட்டமையை உறுதி செய்த பொலிஸார் லொறியை மாடுகளுடன் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.



ஆனால், கடத்திவரப்பட்ட 20 மாடுகளில் ஒன்று உயிரிழந்து விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், லொறியின் சாரதியையும் அவரின் உதவியாளரையும் தாம் கைது செய்துள்ளனர் என்றும் கூறினர். (ஐ- 05)

# மீனவர் பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதி அநுரவுக்கு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் தொலைபேசி உரையாடல் மூலமாக டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

வேலணைப் பிரதேசத்துக்கு பொதுமக்களைச் சந்திப்பதற்கு சென்ற முன்னாள் அமைச்சர் டக்ளஸிடம் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் தொடர்பில் மக்கள் சுட்டிக்காட்டினர்.

தமது வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு வருகின்றமையை புதிய ஆட்சியாளர்கள் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தினர்.

இதன்போது, ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து மக்களின் பிரச்னைகள் தொடர்பில் அவரின் கவனத்துக்கு டக்ளஸ் தேவானந்தா கொண்டு சென்றார்.

இது தொடர்பில், விரைவில் பேச்சுகளை முன்னெடுத்து மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார உறுதியளித்தார். (ஐ)

# தேர்தலில் போட்டியிடவில்லை மீண்டும் அறிவித்தார் சார்ள்ஸ்

மன்னார், ஒக். 10

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலில் இருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் மீண்டும் வெளியேறினார்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

இந்த வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருந்த சட்டத்தரணி தனஞ்சயன், பத்திநாதன் ஆகியோர் விலகியிருந்தனர்.

தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்திருந்த நிலையில், மீண்டும் போட்டியிட விருப்பு தெரிவித்திருந்தார். அவரின் பெயரும் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தது.

இந்த நிலையில், வரும் பாராளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடவில்லை என்று அவர் நேற்று முன்தினம் மீண்டும் அறிவித்துள்ளார். (ஐ)

# வவுனியா பல்கலையில் சுகவாழ்வு நிகழ்வு

வவுனியா, ஒக். 10

இந்திய இலங்கை நட்புறவுக் கழக அனுசரணையுடன் வவுனியா பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் சுக வாழ்வு விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் அகில உலக வர்ம அறிவியல் ஆராய்ச்சி நிறுவன முனைவர் பேராசிரியர் ரி. இராஜேந்திரன் சிறப்பு பேருரையாற்றினார்.

பேராசிரியர் திருமதி ஏ.நந்தகுமாரன் ஏற்பாட்டில் வவுனியா பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. அற்புதராஜா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணை தூதுவர் [illegible] மற்றும் பல்கலைக்கழக வியாபார கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி வை. நந்தகோபன், வளர்வார்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



இதன்போது வர்மக்கலை தொடர்பான பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருடம் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

**மருத்துவ தொழிற்சங்கம் எச்சரிக்கை**

கொழும்பு, ஒக். 10

**அடுத்த வருடம் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான தொழிற்சங்கத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2025 ஆம் ஆண்டுக்கான மருந்துகள் கொள்வனவுக்குரிய அமைச்சரவை பத்திரங்களை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நிராகரித்துள்ளதாக ஊடகங்கள் மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் அடுத்த வருடம் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு வைத்தியத் துறையில் ஏற்கனவே காணப்பட்ட ஊழல்கள் காரணமாக இருக்கலாம். எனினும் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த விடயத்தை நாம் முன்கூட்டியே கூறிவைக்க விரும்புகிறோம்.

மேலும், கடந்த காலங்களில் தரமற்ற மருந்து பாவனையால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அவர்கள் தொடர்பான விபரங்களை சேகரித்து உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என தற்போதைய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்-என்றார். (அ)

# சஜித்தின் மேலதிக பாதுகாப்பு நீக்கம்!

கொழும்பு, ஒக். 10

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் உயிருக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள நிலையில் தனது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் திரும்பப் பெறப்பட்டதாக சஜித் தெரிவித்திருந்தமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சஜித் பிரேமதாஸவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவ்வாறான அச்சுறுத்தல் எதுவும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின்போது அவரது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த மேலதிக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மாத்திரமே வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும், போதியளவு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார். (அ)

# நீரோடைக்குள் தவறி வீழ்ந்து 4 வயதுச் சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 10

புத்தளம் - தங்கொட்டுவ, யோகியான வேகொட பகுதியில் பாலர் பாடசாலை மாணவியொருவர் நேற்று முன் தினம் தனது வீட்டுக்கு பின்புறமாக உள்ள பாதுகாப்பற்ற நீரோடைக்குள் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனன்யா பரமி என்ற 4 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தங்கொட்டுவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த சிறுமி பாலர் பாடசாலைக்கு சென்றுவிட்டு தனது பாட்டியுடன் வீட்டுக்கு திரும்பியதாகவும், வீட்டுக்கு வந்த சிறுமியை குளிப்பாட்டுவதற்காக பாட்டி சுடுநீர் தயார் செய்ய சென்றுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்றபோது சிறுமியின் பெற்றோர்கள் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் தங்கொட்டுவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஷிரான் பெரேராவின் தலைமையில் பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அச்சுறுத்தலா? மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு விசேட குழு

கொழும்பு, ஒக். 10

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நிலவுகின்ற அச்சுறுத்தல் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக விசேடக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.



அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பில் எந்தவித மாற்றமும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இந்தநிலையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு தற்போது அதன் பணிகளை ஆரம்பித்துள்ளது.

எனவே, அந்த குழுவினால் வழங்கப்படும் மதிப்பீட்டு முடிவுகளுக்கமைய அச்சுறுத்தலின் தன்மைக்கு ஏற்ப, முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்புக்காக நியமிக்கப்படும் அதிகாரிகளின் எண்ணிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# தேர்தலில் பெரமுனவை வழிநடத்த வரமாட்டாராம் பஸில் ராஜபக்ஷ!

கொழும்பு, ஒக். 10

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே அமெரிக்கா பறந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பொதுத் தேர்தலில் கட்சியை வழிநடத்துவதற்கு நாடு திருப்பமாட்டார் என தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் நாள் பஸில் ராஜபக்ஷ அமெரிக்கா சென்றார்.

எனினும், பொதுத்தேர்தலில் கட்சியை வழிநடத்துவதற்கு அவர் இலங்கை திரும்புவார் என மொட்டு கட்சி உறுப்பினர்கள் அறிவித்து வந்தனர்.

பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 11 ஆம் திகதியுடன் அப்பணி முடிவடைகின்றது. ஆனாலும் பஸில் ராஜபக்ஷ இன்னும் வரவில்லை. இனியும் அவர் வரமாட்டார் என கட்சி வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

பொதுத்தேர்தலை பொதுஜன பெரமுன கட்சி சார்பில் நாமல் ராஜபக்ஷ வழிநடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# துப்பாக்கி தவறுதலாக வெடித்து வங்கிப் பாதுகாப்பு அலுவலர் பலி!

கொழும்பு, ஒக். 10

பொலன்னறுவை - வெலிகந்த நகரிலுள்ள அரசாங்க வங்கி ஒன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் தனது கடமையை முடித்து விட்டு, துப்பாக்கியை கையளிக்கும் முன்பதாக அதில் சிக்கிக்கொண்டிருந்த தோட்டா ஒன்றை கழற்றுவதற்காக துப்பாக்கியை தரையில் தட்டியபோது துப்பாக்கி திடீரென செயற்பட்டதில் அவர் உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர். வெலிகந்த, சுசிரிகமவில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான 53 வயதான டபிள்யூ. டி.ஜி.அநுர விஜேசிங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலி கந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குவியும் சுயேச்சைக் குழுக்கள்!

கொழும்பு, ஒக். 10

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் இம்முறை அதிக சுயேச்சைக் குழுக்கள் களம் இறக்கப்பட்டு கட்டுப் பணம் செலுத்தியுள்ளன.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் 37 சுயேச்சைக் குழுக்களும், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 22 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

இதேபோன்று வன்னி மாவட்டத்தில் 21 சுயேச்சைக் குழுக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 17 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

இலங்கையின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் அதிக சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்திய மாவட்டங்களாகவும் வடக்கு, கிழக்கு காணப்படுகின்றது.

இதேநேரம், சுயேச்சையாகப் போட்டியிடுவோர் கட்டுப்பணம் செலுத்தும் காலம் இன்னமும் காணப்படுவதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

இலங்கையில் அதிக மக்கள் தொகை கொண்ட கொழும்பு மாவட்டத்தில் 17 சுயேச்சைக் குழுக்களும், கம்பஹா மாவட்டத்தில் 12 சுயேச்சைக் குழுக்களுமே கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இணையவழி குற்றங்கள் இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 10

இணையவழி குற்றங்கள் தொடர்பில் 09 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது.

இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழுவின் பொறியியலாளர் சாருக தமுனுபொல இது தொடர்பில் தெரிவிக்கையில்-

2024 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இவ்வகையான குற்றங்கள் பதிவாகியுள்ளன.

இவற்றில் 80 வீதமான முறைப்பாடுகள் சமூக ஊடகங்களுடன் தொடர்புடையவவை. இவற்றில் இணையவழி மோசடி தொடர்பில் 1,400 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

85 முறைப்பாடுகள் சிறுவர்கள் மீதான இணைய அச்சுறுத்தல்களுடன் தொடர்புடையவை. நாற்பது முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடையவை.

இணையவழி ஊடாக பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வுகளை அதிகரிக்கவேண்டியதன் அவசியத்தை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து அமைச்சின் 25 வாகனங்கள் மாயமாகின!

**கணக்காய்வு அறிக்கையில் அம்பலம்**

கொழும்பு, ஒக். 10

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 10 கார்கள், 10 கப் வாகனங்கள், 02 ஜீப் வாகனங்கள், 02 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் லொறி ஒன்று காணாமல்போயுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதனை தற்போது பயன்படுத்தும் தரப்பினர் குறித்த தகவல்களை வெளியிட முடியாது எனவும் கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளது.

இந்த வாகனங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டதற்கான எந்த ஆதாரத்தையும் தணிக்கையில் வெளிப்படுத்தவில்லை என்றும் தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சின் போக்குவரத்துப் பிரிவு இது தொடர்பாக நிதி விதிமுறைகளின்படி செயல்படவில்லை என்றும், இந்த வாகனங்கள் 31 டிசெம்பர் 2023 நிலவரப்படி அமைச்சின் வாகனப் பட்டியல் மற்றும் சொத்துக் கணக்கில் சேர்க்கப்படவில்லை என்றும் தணிக்கை அறிக்கை கூறுகிறது.

இதன் காரணமாக, 2023ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் சேர்க்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாக தணிக்கையில் தெரியவந்துள்ளது.

அத்துடன், அமைச்சின் போக்குவரத்துப் பிரிவுக்குச் சொந்தமான 15 கார்கள் ஏனைய அரச நிறுவனங்களால் பிரத்தியேகமாக பயன்படுத்தப்பட்ட போதிலும், இந்த வாகனங்கள் முறையாக ஒப்படைக்கப்படவோ அல்லது மீட்கப்படவோ இல்லை.

33.7 மில்லியன் ரூபா பெறுமதியான 08 வாகனங்களும், இனி கணக்கில் வராத 07 வாகனங்களும் உள்ளதாகவும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சால் வெளியிடப்பட்ட செயல்திறன் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தணிக்கை அறிக்கையில் இந்தத் தகவல் சேர்க்கப்பட்டுள்ளது.

# கொழும்பு வீட்டிலிருந்து வெளியேறினார் அமரவீர

கொழும்பு, ஒக். 10

கொழும்பு-7, பேஜெட் வீதியில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து முன்னாள் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர வெளியேறினார்.

தனது உத்தியோகபூர்வ இல்லத்தை சிறிமாவோ பண்டாரநாயக்க பெண்கள் கல்லூரிக்கு மாற்றுவதற்கு கடந்த அரசின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது என்ற பிரேரணையை தற்போதுள்ள அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததாக மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்நிலையில், கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க மகளிர் கல்லூரியின் செயபாடுகளுக்கு இந்த உத்தியோகபூர்வ இல்லத்தை பயன்படுத்துவது தொடர்பான அனைத்து கடிதப் பரிமாற்றங்களும் நிறைவடைந்துள்ளதாகவும், அதன்படி நேற்று முன் தினம் முதல் உத்தியோகபூர்வ இல்லம் சிறிமாவோ மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (அ)

# தேயிலையின் விலை அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 10

கொழும்பு ஏலத்தில் தேயிலையின் சராசரி விலை, கடந்த ஓகஸ்ட் மாதத்தில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் தேயிலை கிலோ ஒன்றுக்கான சராசரி விலை 3.49 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இந்நிலையில், கடந்த ஓகஸ்ட் மாதத்தில் தேயிலை கிலோவொன்றுக்கான சராசரி விலை 4.02 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)



# ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சி கொழும்பில் அங்குரார்ப்பணம்!

கொழும்பு, ஒக். 10

ஐக்கிய ஜனநாயகக் குரல் என்று புதிய கட்சி நேற்று கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

"ஐக்கிய ஜனநாயக குரல்" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று காலை கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகருமான ரஞ்சன் ராமநாயக்கவின் தலைமையில் இந்த புதிய கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கட்சியின் சின்னமாக ஒலிவாங்கி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய ஜனநாயக குரல் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உத்தியோபூர்வ இல்லங்களை இதுவரை கையளிக்காதவர்கள் மீது நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 10

உத்தியோகபூர்வ இல்லங்களை தொடர்ந்தும் வைத்திருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து திருப்பி கையளிக்குமாறு உத்தரவிட்ட 41 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களில் 14 வீடுகள் மட்டுமே திருப்பி கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 41 குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரி தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், உத்தியோகபூர்வ இல்லங்களைத் திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பை பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டது. (அ)

# ரோஹண விஜயவீரவின் மகன் குருநாகல் மாவட்டத்தில் போட்டி

கொழும்பு, ஒக். 10

ஜே.வி.பியின் ஸ்தாபகரான ரோஹண விஜேவீரவின் மகனான உவிந்து விஜேவீர எதிர்வரும் பொதுத்தேர்தலில் களமிறங்கவுள்ளார்.

இரண்டாம் தலைமுறை எனும் அமைப்பின் தலைவரான இவர், குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவார் என தெரியவருகின்றது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேன, பொதுத்தேர்தலில் மௌபிம ஜனதாக் கட்சியில் பொலனறுவை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்லவின் மகள், கண்டி மாவட்டத்தில் களமிறங்கவுள்ளார். லக்ஷ்மன் கிரியெல்ல இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. (அ)

# வாகன இறக்குமதிக்கான பரிந்துரைகளை நிதி அமைச்சுக்கு வழங்கிய மத்திய வங்கி!

கொழும்பு, ஒக். 10

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்புகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி நிதி அமைச்சுக்கு தேவையான பரிந்துரைகளை வழங்கியுள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

2022 இல், இலங்கை வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. அப்போது, வாகனங்கள் உட்பட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களுக்கு அப்போதைய அரசு இறக்குமதி கட்டுப்பாடு விதித்தது.

ஆனால் கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டு, பல பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதித்தது. அதன்படி, தடையின்றி இறக்குமதியை அனுமதிக்கும் வகையில் இறுதி தளர்வு இருக்க வேண்டும். இதன்படி, வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான பூரண அனுமதியை அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்குள் வழங்குவதற்கு முன்னைய அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அந்த தீர்மானத்தில் தற்போது மாற்றம் ஏற்படுமா என மத்திய வங்கி ஆளுநரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு இருப்புக்களை பாதிக்காத வகையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான பரிந்துரைகளை திறைசேரிக்கு ஏற்கனவே வழங்கியுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

ஆனால் அவ்வாறு வாகன இறக்குமதியை அனுமதிப்பது குறித்து நிதியமைச்சு முடிவெடுக்க வேண்டும் என்று அவர் கூறினார். (அ)

# அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சடுதியாக அதிகரித்தது எச்.ஐ.வி.

**87 நோயாளர்கள் அடையாளம்**

கொழும்பு, ஒக். 10

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இவ்வருடம் துரிதமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்ட பாலியல் நோய் தடுப்பு பிரிவின் வைத்திய அதிகாரியொருவர் அம்பலாங்கொடை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற மருத்துவ முகாமொன்றில் கலந்துகொண்டபோதே ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இதுவரை 21 பேர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியிருப்பது இனங்காணப்பட்டுள்ளதோடு, இன்னும் அடையாளம் காணப்பட வேண்டியவர்கள் இருக்கக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாவட்டத்தில் மொத்தம் 87 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் சூரியவெவ மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் இன்னும் அடையாளம் காணப்பட வேண்டியவர்கள் இருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளின் பாதுகாப்பு ஆபத்தில்!

## சூழ்ச்சிகள் உள்ளனவா என சந்தேகிக்கின்றார் சாகர

கொழும்பு, ஒக். 10

**அநுர தலைமையிலான அரசாங்கம் திட்டமிட்டு எதிர்க் கட்சிகள் மற்றும் பிரபல வர்த்தகர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான செயல்பாடுகளை முன்னெடுப்பதாக பொது ஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை நீக்குவது தொடர்பில் எதுவித எதிர்ப்புகள் இல்லை. எனினும் கடந்த சில தினங்களில் கடும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்திருந்த அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பி னர்களின் பாதுகாப்பை நீக்கி யுள்ளமை சிக்கலான நிலை என வும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறு உயிர் அச்சுறுத் தல்களுக்கு முகம் கொடுத்த அமைச்சர்கள் பலர் வீதியில் கொல்லப்பட்ட சந்தர்ப்பங்க ளும் காணப்படுவதாக கூறிய அவர், அவ்வாறான அரசியல் வாதிகள் மற்றும் வர்த்தகர்க ளுக்கு பாதுகாப்புக்காக அர சாங்கத்திலிருந்து ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் தற் போது எதுவித தேடலும் இன்றி குறித்த ஆயுதங்களை மீளப் பெற் றுக் கொள்ள முயற்சிப்பதாக வும் சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு நபரினதும் பாதுகாப்பை நீக்குவதெனின் அது தொடர்பில் சரியான ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும், குறித்த நபருக்கு எது வித ஆபத்தும் இல்லை என புலனாய்வுப் பிரிவு அல்லது பாதுகாப்புப் பிரிவு உறுதிப் படுத்திய பின்னர் ஆயுதங்களை மீள பெறுவது தொடர்பில் எதிர்ப்புகள் இல்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சிகள் அனைத்தின தும் பாதுகாப்பை நீக்கியமை யில் ஏதேனும் சூழ்ச்சிகள் இருக் கலாம் என்ற சந்தேகம் எழுந் துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர் அவர்களை மௌனமாக் கும் நோக்கில் இவ்வாறான செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டாம் என ஜனாதிபதியி டம் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார். (அ)

# வாகன இறக்குமதி குறித்து எவ்வித தீர்மானமும் இல்லை

## பிரசாத் மானகே கூறுகிறார்

கொழும்பு, ஒக். 10

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாகனங்களை இறக்கு மதி செய்வதற்கு எந்தவிதத் தீர் மானமும் மேற்கொள்ளப்பட வில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதி தொடர் பில் பல்வேறு கருத்துகள் முன் வைக்கப்பட்டு வரும் நிலையில், இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைக் கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து வாக னங்கள் இறக்குமதி செய்யப்ப டும் எனக் கூறப்படுகிறது.

ஆனால், இதுவரையில் அதற்கான சுற்றறிக்கையோ அல்லது ஆவணமோ சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு அனுப் பிவைக்கப்படவில்லை.

அரசாங்க அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாட லுக்கமைய, வாகன இறக்குமதி தொடர்பில் தற்போதைய அர சாங்கத்தினால் எந்தவொரு தீர் மானமும் எட்டப்படவில்லை என அறியமுடிகிறது.

வாகன இறக்குமதி கொள் கைக்கு அமைய எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள் அனைத்து வகையான வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கான சாத்தியம் காணப்படவில்லை.

முதற்கட்டமாக ஜனவரி மாதம் பஸ் மற்றும் பாரவூர்தி களை இறக்குமதி செய்து, அந் நியச் செலாவணியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என் பதை அவதானித்து அதன் பின் னர் கட்டம் கட்டமாக வாக னங்களை இறக்குமதி செய்வ தற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சுமார் இரண்டு வருடங்க ளுக்குள் அனைத்து வகையான வாகனங்களையும் நாட்டுக்கு இறக்குமதி செய்யும் வகையி லேயே திட்டங்கள் வகுக்கப்பட் டிருந்தன.

எவ்வாறாயினும், வாகன இறக்குமதி தொடர்பில் எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்புகளும் இதுவரை வெளியிடப்படவில்லை.

நாட்டின் தற்போதைய நிலை யில், எதிர்வரும் நவம்பர் அல் லது டிசம்பர் மாதத்திற்குள் அனைத்து வகையான வாகனங் களையும் இறக்குமதி செய்வ தற்கு அனுமதி அளிப்பது சாத் தியமற்றது-என்றார். (அ)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்:

# ரூ.311 மில்லியன் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது!

கொழும்பு, ஒக். 10

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவா தத் தாக்குதலில் பாதிக்கப்பட் டவர்களுக்கு 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி உயர்நீதிமன்ற வழங்கிய தீர்ப் பின்படி மொத்தம் 311,000,000 ரூபாய் இழப்பீடு வழங்கப்பட் டுள்ளது.

இழப்பீட்டுக்கான அலுவல கத்தால் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு இழப்பீட்டு நிதி வழங் கப்பட்டுள்ளது.

இழப்பீடுகளுக்கான அலுவ லகம் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளின் பிர காரம் இந்த நிதியை வழங்கி வருகிறது.

மொத்த தொகையான 311,000,000 ரூபாயில் 62,345,502 ரூபாய் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி சத்திர சிகிச்சைச் செலவுகள், குழந்தைகளின் கல்வி, நிரந்தர ஊனமுற்றோர் மற்றும் ஏனைய தேவைகளுக் குச் செலவிடப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலால் பாதிக் கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்காக 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதியன்று இழப்பீடு விநியோ கத்தை உயர்நீதிமன்றம் மீள் ஆய்வு செய்யும்.

இந்நிலையில், அரச புல னாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தனவும் தனக்கு விதிக்கப்பட்டிருந்த தொகையை செலுத்தி நிறைவு செய்திருந்தார்.

மேலும், இந்த வழக்கில் பிர திவாதிகளுக்கு இழப்பீடாக வழங்க உத்தரவிடப்பட்ட பெருந்தொகை நிதி எங்கிருந்து கிடைத்தது என்பது குறித்து தற்போது பல கேள்விகள் எழுந் துள்ளன. (அ)

# முறையற்ற மதுபான அனுமதிகள்: பட்டியல் வெளியிட அரசு தாமதம்

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 10

அரசியல் ஆதாயங்களுக்காக மதுபான அனுமதிப்பத்திரம் பெற்றவர்களையும் அதன் பின் னணியில் உள்ள அரசியல்வாதி களையும் அம்பலப்படுத்துவ தில் புதிய அரசாங்கம் தாமதம் செய்வது குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கேள்வி எழுப் பியுள்ளார்.

அவர் தனது எக்ஸ் தளத்தி லேயே இந்த கேள்வியை எழுப் பியுள்ளார்.

மதுபானச்சாலைகளை நிறு வுவதற்கான அனுமதி அல்லது உரிமம் சட்டவிரோதமான வணிகம் அல்ல, ஆனால் அண் மைய காலங்களில், சட்ட விதி களை புறக்கணித்து அதிக எண் ணிக்கையில் கலால் திணைக்க ளத்தால் மதுபான உரிமங்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயன்முறை நெறிமுறையற்ற ஊழல் நடை முறை என்றும் அரசியல் லஞ் சம் என்றும் அழைக்கப்படுகி றது என கூறிய அவர் ஜனாதி பதித் தேர்தலுக்கு முன்னதாக இந்த விடயம் மிகவும் பரபரப் பான விடயமாக பேசப்பட்ட தையும் மனோ சுட்டிக்காட்டி னார்.

அண்மையில் வழங்கப்பட்ட அனைத்து மதுபான உரிமங் களை இடைநிறுத்தல், உரிமம் வைத்திருப்பவர்களின் பெயர் களை வெளியிடல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட அரசியல் வாதிகளின் பெயர்களை வெளி யிடுவதாகவும் ஜனாதிபதி அனு ரகுமார திசாநாயக்க வாக்குறுதி யளித்திருந்தபோதிலும் இது



வரை பெயர்கள் வெளியாக வில்லை என்றும் மனோ கணே சன் குறிப்பிட்டுள்ளார்.

பெயர்ப் பட்டியலை வெளி யிடுவதற்கும், நெறிமுறையற்ற மதுபானச்சாலை செயற்பாடு களை இடைநிறுத்துவதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங் கத்திற்கு உள்ள தடை குறித்து மனோ கணேசன் பிரதமரிட மும் கேள்வி எழுப்பினார். (அ)

# எரிபொருள் விலையை குறைப்பதால் இலாபம் பணக்காரர்களுக்கு மட்டுமே!

## பேராசிரியர் வசந்த அத்துக்கோரள சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 10

எரிபொருள் விலையைக் குறைத்தால் அதன் இலாபம் பணக்காரர்களுக்கு மாத்திரமே கிடைக்கும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளா தார பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள கூறியுள்ளார்.

இலங்கையின் பொருளாதா ரத்தை கட்டியெழுப்ப வரி வரு மானம் அதிகரிக்கப்படவேண் டும் எனவும், எரிபொருள் விலையை குறைப்பதன் மூலம் ஏழை மக்களுக்கு நேரடி நிவார ணம் கிடைக்காது எனவும் பேராசிரியர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

வரிகள் நீக்கப்பட்டு எரிபொ ருள் விலை குறைக்கப்பட்டால் அதன் பலன் பணக்காரர்களுக் குத்தான் கிடைக்கும். அதிக எரிபொருளை பயன்படுத்து வது ஏழை மக்கள் அல்ல. ஏழை மக்கள் சில மறைமுக நன்மைக ளைப் பெறலாம். ஆனால், பணக்காரர்களுக்கு அதிக நன்மை உண்டு.

எனினும், எரிபொருள் விலை போக்குவரத்து மற்றும் உணவு உட்பட பல விடயங்களில் தங் கியுள்ளது-என்றார். (அ)

# ஊசி மருந்து கொள்வனவால் 97 மில்லியன் ரூபாய் நட்டம்!

கொழும்பு, ஒக். 10

கடந்த வருடம் மருத்துவ விநி யோகப் பிரிவினால் மேற்கொள் ளப்பட்ட ஊசி மருந்து குப்பிகள் கொள்வனவினூடாக, அரசாங் கத்துக்கு 97 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சட் டமா அதிபர் மாளிகாகந்த நீத வான் நீதிமன்றில் அறிக்கை தாக் கல் செய்தார்.

இந்தநிலையில், லெக்டிய லோஸ் மில்லிமீற்றர் 120 என்ற குறித்த மருந்தைக் கொள்வனவு செய்யும்போது இந்த மோசடி இடம்பெற்றுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நாயகம் லக்மினி கிரிஹாகம தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய இம்யூனோ குளோபுலின் ஊசி மருந்து குப் பிகளைக் கொள்வனவு செய்த போது, மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளராக இருந்த கபில விக்ரமநாயக்கவின் நிர்வா கத்தின்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கட்சிகள் ஓரணியாக போட்டி; இல்லையேல் அநுரவை ஆதரிப்போம்!

## அம்பாறை மக்கள் சார்பில் எச்சரிக்கை



காரைதீவு, ஒக். 10

**அம்பாறை மாவட்டத்தில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியாக போட்டியிடவேண்டும். இல்லையேல் நாம் அநுரகுமாரவின் கட்சியை ஆதரிக்க நேரும் என்று அந்த மாவட்டத்தின் மக்கள் சார்பில் சிவில் சமூக அமைப்பு எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில், சிவில் சமூக அமைப்பினர் நடத்திய கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படுகின்றது. 1994 முதல் 2020 வரை அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமையின்மையால் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது. இதேபோன்றதொரு துர்ப்பாக்கிய நிலை கடந்தமுறையும் நடந்தது. தற்போதும் இந்த நிலைமை உள்ளது.

எனவே அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாக போட்டியிட வேண்டும். இல்லையேல் நாம் தேர்தலில் அநுரவின் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு வாக்களிக்க நேரும் - என்றனர். (ஐ)

# மாமியாரை வன்புணர்ந்து 35 பவுண் நகை கொள்ளை!

## களுவாஞ்சிக்குடியில் கொடூரம்

மட்டக்களப்பு, ஒக். 10

தனியாக வசித்து வந்த மாமியரை வன்புணர்வுக்கு உட்படுத்திவிட்டு 35 பவுண் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்ற மருமகனை பொலிஸார் தேடி வருகின்றனர்.

களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பாதிக்கப்பட்ட பெண் (வயது 38) கணவர் இல்லாத நிலையில் தனியாக வசித்து வந்துள்ளார். இந்த நிலையில் அவரின் மகள் (வயது 20) திருமணம் செய்து வேறு இடத்தில் வசித்து வருகிறார். இந்த நிலையில் மகளின் கணவர் 16 பேர் கொண்ட குழுவுடன் ஞாயிற்றுக்கிழமை இரவு அங்கு சென்றுள்ளார்.

மாமியாரின் வீட்டுக்குள் புகுந்த அவர் அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியதுடன் 35 பவுண் நகைகளையும் கொள்ளையிட்டுள்ளார்.

திங்கட்கிழமை இரவு மாமியார் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதைத் தொடர்ந்து அவரை மருத்துவமனையில் சேர்த்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஆற்றிலிருந்து சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, ஒக். 10

வயல் வேலையை முடித்துவிட்டு ஆற்றில் தனியாகக் குளித்த தொழிலாளி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

மட்டக்களப்பு - மாவடி ஓடை - நெடிய பொத்தானை ஆற்றில் மூழ்கியே இவர் உயிரிழந்தார். இதில், தாழங்குடாவை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தம்பிராசா சிவஞானம் (வயது 49) என்பவரே உயிரிழந்தார்.

அவர் தனியாக குளித்த போது காக்கைவலிப்பு ஏற்பட்டு ஆற்றில் விழுந்து மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மதுபானசாலைக்கு எதிராக சவப்பெட்டியுடன் ஆர்ப்பாட்டம்!




கல்முனை, ஒக். 10

மதுபானசாலை திறந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சவப்பெட்டியுடன் ஆர்ப்பாட்டம் ஒன்று மக்களால் நடத்தப்பட்டது.

கல்முனை - பெரியநீலாவணையில் நேற்று புதன்கிழமை காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், பொதுகமக்களுக்கு இடையூறாக இந்த மதுபான நிலையம் இருப்பதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் ஏற்கனவே, ஒரு மதுபானசாலை நீண்ட நாட்களாக உள்ள நிலையில் புதிதாக ஒரு மதுபான சாலை திறக்கப்பட்டுள்ளதாகவும் சிறிய கிராமத்துக்கு இரு மதுபான சாலைகள் அவசியமா என்று கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பிரதேசத்துக்கு சென்ற கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் மதுபான சாலையை தற்காலிகமாக மூடுமாறும் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறும் கூறினார். தொடர்ந்து, மதுவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி குறித்த மதுபானசாலையை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். (ஐ)



# கந்தளாயில் பயிர் செய்கைகளை துவம்சம் செய்த காட்டு யானைகள்

திருகோணமலை, ஒக். 10

கந்தாளயில் கிராமம் ஒன்றுக்குள் புகுந்த யானைகள் பயிர் செய்கைகளை அழித்துவிட்டு சென்றுள்ளன.

திருகோணமலை - கந்தளாய் - மினிபுர கிராமத்துக்குள் நேற்று அதிகாலை காட்டு யானைகள் புகுந்தன.

அவை வாழ்வாதார பயிர்கள் மற்றும் பயன்தரு செய்கைகளை அழித்ததுடன், வீடொன்றையும் தாக்கி சேதப்படுத்தின.

சோமாவதிக் காடு மற்றும் சூரியபுர கழிவு போடப்படும் இடங்களிலிருந்து வரும் இந்த காட்டு யானைகள் தொடர்ந்து கிராமங்களுக்குள் புகுந்து இவ்வாறான அழிவுகளை தொடர்ச்சியாக செய்கின்றன. எனவே, காட்டு யானைகளின் தொல்லையை விரைவில் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# விபுலானந்தர் மணிமண்டபத்தில் சிறப்புற நடந்தது நவாராத்திரி விழா!

காரைதீவு, ஒக். 10

இந் துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் சுவாமி விபுலானந்தர் கற்கைகள் நிறுவனமும் இணைந்து நடத்திய நவராத்திரி விழா காரைதீவு சுவாமி விபுலானந்தர் மணி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

நேற்று முன்தினம் மன்றத்தின் உறுப்பினர் த. நடேசலிங்கம் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

இந்த விழாவில் உதவிக் கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா சிறப்புரை ஆற்றினார். விசேட பூசையை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி நடத்தினார். கொலுவுக்கான பூஜையை அறநெறி ஆசிரியைகள் நடத்தினர்.

தொடர்ந்து, பாண்டிருப்பு நாவலர், அட்டைப்பள்ளம் சித்தி விநாயகர் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# மக்கள் குடியிருப்புக்குள் புகுந்தது தனியன் யானை!

கல்முனை, ஒக். 10

சம்மாந்துறையில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த தனியன் யானை ஒன்று பயிர்களை அழித்துச் சென்றுள்ளது.

நேற்று புதன்கிழமை காலை அம்பாறை - சம்மாந்துறை - தமிழ் பிரிவு 4 - குவாசி நீதி மன்றத்துக்கு முன்னால் உள்ள வீதியிலுள்ள காணிகளுக்குள் புகுந்த தனியன் யானையே இந்த அழிவுகளை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

கடந்த இரு நாட்களாக இந்தத் தனியன் யானை இவ்வாறு அழிவுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும். இது விடயத்தில் அதிகாரிகள் தலையிட்டு அதனை விரட்ட வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# விவேகானந்த மாணவியர் கௌரவிக்கப்பட்டனர்!

திருகோணமலை, ஒக். 10

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் வரலாற்று சாதனை படைத்து பதக்கங்களை சுவீகரித்த திருகோணமலையை சேர்ந்த பாடசாலை மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலை விவேகானந்த கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதனை திருகோணமலை பளுதூக்கல் கழகம் மற்றும் விளையாட்டு பாசறை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது, தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் பதக்கங்களை சுவீகரித்த மாணவிகளும் இவர்களது சாதனைக்கு காரணமாக இருந்த பயிற்றுவிப்பாளர் உமாசுதன் உள்ளிட்டவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்டியன் நோயன் இம்மானுவேல் கலந்து சிறப்பித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு ரஷ்யா சதி!

## பிரிட்டன் புலனாய்வு பிரிவு எச்சரிக்கை

லண்டன், ஒக். 10

**பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்று பிரிட்டனின் புலனாய்வு அமைப்பான எம்15 இன் தலைவர் எச்சரித்துள்ளார்.**



பிரிட்டன் எதிர்கொண்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து தகவல்களை வெளியிட்டுள்ள கென் மக்கலம் ரஷ்யா நாசவேலைகள் உட்பட ஆபத்தான நடவடிக்கைகளை பொறுப்பற்ற விதத்தில் முன்னெடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

உக்ரைனை பிரிட்டன் ஆதரித்தமைக்காகவே ரஷ்யா இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று அவர் கூறியுள்ளார்.

2022 முதல் ஈரான் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்ட சதி முயற்சிகளை முறியடியத்துள்ளதாக தெரிவித்துள்ள கென் மக்கலம் இஸ்லாமிய தீவிரவாதிகளே அநேகமாக இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என தெரிவித்துள்ளார்.

இளவயதினர் அதிகளவுக்கு தீவிரவாதம் நோக்கி ஈர்க்கப்படுகின்றனர். தீவிரவாத விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 13 வீதமானவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். 2017 முதல் பிரிட்டனில் துப்பாக்கிகள் வெடிபொருட்களை பயன்படுத்தி தாக்குதலை மேற்கொள்வதற்கு பல முயற்சிகள் இடம்பெற்றன இவற்றில் 43 தாக்குதல் முயற்சிகளை இறுதி நேரத்தில் முறியடித்துள்ளோம் - என்று அவர் கூறினார். (ஐ)



# இலங்கை தூதரகத்தின் முன்பாக போராட்டம்!


## சென்னையில் பா. ம. க. முன்னெடுப்பு

சென்னை, ஒக். 10

சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு பாட்டாளி மக்கள் கட்சியினர் (பா. ம. க.) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் அடக்குமுறைகளை கண்டித்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வங்கக்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் அத்துமீறி கைது செய்யப்படுவதோடு, ஆண்டுக்கணக்கில் சிறை தண்டனை, கோடிக்கணக்கில் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. இவற்றைக் கண்டித்தே நேற்று முன்தினம் இந்தப் போராட்டத்தை தாம் முன்னெடுத்ததாக பா.ம. கவினர் கூறினர். (ஐ)



# இயற்பியலுக்கான நோபல் இருவருக்கு பகிர்ந்தளிப்பு!

ஸ்டாக்ஹோம், ஒக். 10

இயற்பியலுக்கான இந்த ஆண்டு நோபல் பரிசு அமெரிக்காவை சேர்ந்த ஜோன் ஹோப் பீல்ட், கனடாவின் ஜெப்ரி ஹின்டன் ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய 6 துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அந்த வகையில் 2024ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் தற்போது அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இயற்பியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழக விஞ்ஞானி ஜோன் ஹப்பீல்ட், கனடாவின் பிரிட்டன் விஞ்ஞானி ஜெப்ரி ஹின்டன் ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் மூலம் ஆர்டிபிஷியல் நியூரல் நெட் வொர்க்ஸ் தொடர்பான கண்டுபிடிப்புக்காக இந்த நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித உடலின் செயல்பாட்டுக்கு நரம்பு மண்டலம் உறுதுணையாக இருப்பதுபோல் கணினிக்கு ஆர்டிபிஷியல் நியூரல் நெட் வொர்க்ஸை இவர்கள் உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் கணினியே சுயமாக தகவல்களை மனனம் செய்து தரவுகளை கற்றுக் கொண்டு செயல்படும். வெவ்வேறு தகவல்களை சேகரித்து அவற்றை வகைப்படுத்தி, எதிர்காலத்தில் என்ன வெல்லாம் நிகழும் என்பதை கணித்து, முடிவுகளை தானே எடுக்கும். இந்த புதிய கண்டுபிடிப்பில் இயற்பியல், உயிரியல் மற்றும் கணினி அறிவியல் ஆகியமூன்று துறைகளும் கூட்டாகஇணைத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கண்டுபிடிப்பை நிகழ்த்தியிருக்கும் விஞ்ஞானி ஜெப்ரி ஹின்டன் 'செயற்கை நுண்ணறிவின் பிதாமகன்' என்று போற்றப்படுபவர். அவருக்கு வயது 76. அதைவிடவும் விஞ்ஞானி ஜோன் ஹப்பீல்டுக்கு 94 வயது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹிஸ்புல்லாஹ்வின் தலைமைகள் அனைவரையும் அழித்துவிட்டோம்!

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு



டெல் அவிவ், ஒக். 10

"ஹிஸ்புல்லாஹ்களுக்கு எதிரான தாக்குதலில் அதன் தலைவர் சையது ஹசன் நஸ்ரல்லா மட்டுமல்ல அவருக்கு அடுத்த படியாக அறியப்பட்ட தலைமை அதற்கு அடுத்தவர், அடுத்தவருக்கு அடுத்தவர் என அனைவரையும் அழித்துவிட்டோம்" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்குள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி புகுந்த ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக காஸாவை கைப்பற்ற இஸ்ரேல் படைகள் போர் நடத்தி வருகின்றன. இந்த நிலையில், ஹமாஸுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, ஹிஸ்புல்லாஹ்வுக்கு எதிராகவும் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், லெபனான் மக்களுக்கு காணொலி அறிவிப்பு ஒன்றை வெளியிட்ட இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, "நாங்கள் ஹிஸ்புல்லாஹ்களின் அனைத்து பலங்களையும் சிதைத்துவிட்டோம். நஸ்ரல்லாவை மட்டுமல்ல அவருக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட தலைமை, அவருக்கு மாற்று, மாற்றத்துக்கு மாற்று என அடுத்த வாரிசுகள் அனைத்தையும் வீழ்த்திவிட்டோம்.

லெபனான் மக்கள் இனி தங்களின் தேசத்தை ஹிஸ்புல்லாஹ்களின் பிடியில் இருந்து பாதுகாக்க வேண்டும். லெபனான் ஒரு காலத்தில் அழகுக்கும், சகிப்புத்தன்மைக்கும் அறியப்பட்டது. ஆனால், இப்போது குழப்பங்களுக்கும், போருக்கும் அறியப்படுகிறது. இதற்கு ஹிஸ்புல்லாஹ்களே காரணம்.

லெபனான் மக்களே உங்களுக்கு சிறப்பான எதிர்காலம் வேண்டாமா?. அப்படியென்றால், உங்கள் தேசத்தை நீங்கள் மீட்டெடுங்கள். தீவிரவாதிகள் பிடியில் உங்கள் தேசம் இனியும் சிக்கிக் கொள்ளாமல் எச்சரிக்கையாக இருங்கள்", - என்று கூறியுள்ளார். (ஐ)

# இஸ்ரேல் கடும் தாக்குதல் லெபனானில் 36 பேர் பலி!

பெய்ரூட், ஒக். 10



லெபனான் மீது நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 36 பேர் உயிரிழந்தனர். 150 பேர் காயமடைந்தனர் என்றுஎன அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்குள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி புகுந்த ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலில் ஆயிரத்து 150இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 253 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதற்கு பதிலடியாக காஸாமீது இஸ்ரேல் படைகள் போர் நடத்தி வருகின்றன. இந்த நிலையில், ஹமாஸுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, ஹிஸ்புல்லாஹ்வுக்கு எதிராகவும் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில, லெபனான்மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 137 வான்வழி தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதுவரை 9,400 தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

தாக்குதல்களால் இடம்பெயர்பவர்களை தங்க வைப்பதற்கு 990 முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. 781 முகாம்களில் அதிகளவான மக்கள் தங்கியுள்ளனர்.

இதனிடையே, லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 2,119 பேர் உயிரிழந்தனர். 10 ஆயிரத்து 19 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முற்கூட்டியே நேரும் முதுமை நோயுடன் வாழ்ந்தவர் மரணம்

ரோம், ஒக். 10

பிறப்பில் இருந்தே மிக வேகமாக முதுமையடைகின்ற ஒரு வகை நோயுடன் வாழ்ந்துவந்த இத்தாலி நாட்டவரான சாமி பஸ்ஸோ என்பவர் தனது 28 ஆவது வயதில் உயிரிழந்தார்.

சாமி பஸ்ஸோ கடந்த சனியன்று இரவு நண்பர்களுடன் உணவகம் ஒன்றுக்கு சென்றிருந்த சமயத்தில் அங்கே திடீரென நிலைகுலைந்து வீழ்ந்து மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புரோஜீரியா எனப்படுகின்ற முன்கூட்டிய முதுமை நோயுடன் வாழ்ந்த உலகின் மூத்த நோயாளி சாமி பஸ்ஸோ ஆவார். 01 டிசெம்பர் 1995இல் இத்தாலியின் வடக்குப் பகுதியில் பிறந்தவர். அங்குள்ள படுவா பல்கலைக் கழகத்தில் மூலக்கூறு உயிரியல் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். அவருக்கான அஞ்சலி குறிப்பில் இத்தாலியின் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, "பெரும் சவாலான வாழ்வை ஒரு புன்னகையுடன் கடந்து வென்றவர். தன்னம்பிக்கை, துணிச்சல் நிறைந்த அவரது 28 வருட வாழ்க்கை பிறருக்கு என்றைக்கும் முன்னுதாரணமாக விளங்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

புரோஜீரியா நோயுடன் பிறப்போர் 13, 14 ஆண்டுகளுக்குள் தீவிர முதுமை நிலையை அடைந்து உயிரிழக்கின்றனர். சாமி பஸ்ஸோ 28 வருடங்கள் முதுமையுடன் போராடி வாழ்ந்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச உறவுகளில் புதிய தொடக்கத்தை ஜெனிவாவில் முனைப்பாக வெளிக்காட்ட முடியும்



கலாநிதி ஜெகான் பெரேரா

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலின் முடிவில் அக்கறையுடன் கவனம் செலுத்திய வெளிநாட்டு தூதரகங்கள் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் வெற்றிக்கு பிறகு ஒரு கணமேனும் தாமதிக்காமல் அவருக்கு நேசக்கரம் நீட்டின. தேர்தலுக்கு முன்னதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மேற் குலக நாடுகளின் விருப்பத்துக்குரியவராக விளங்கினார் போன்று தோன்றியது.

பொருளாதாரத்தை விக்கிரமசிங்க கையாண்ட முறையைப் பாராட்டி அந்த நாடுகள் அடிக்கடி அறிக்கைகளை வெளியிட்டன. சர்வதேச நாணய நிதியமும் அதே போன்று அவருக்கு ஆதரவான அறிக்கைகளை வெளியிட்டது. விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் மேற்குலக நாடுகளின் தலைமையிலான நடவடிக்கைகளுடன் தன்னை அடையாளப்படுத்துவதற்கு விசேட முயற்சிகளை முன்னெடுத்தது. செங்கடலில் கடற்படை நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு போதிய வசதிகளுடனான கப்பல்கள் இல்லாவிட்டாலும் கூட அவற்றில் பங்கேற்பதற்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை இதற்கு ஒரு உதாரணமாகக் கூறலாம்.

தேசிய மக்கள் சக்தியினதும் அதன் ஜனாதிபதி வேட்பாளரினதும் வெளியுறவுக் கொள்கைத் திசைமார்க்கமே பொதுவில் மேற்குலக நாடுகளினதும் குறிப்பாக இந்தியாவினதும் முக்கிய கரிசனைக்குரிய விடயமாக இருந்தது. தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) மார்க்சிய - லெனினிச கோட்பாட்டை பின்பற்றுகின்றது என்பதால் அதே போன்ற ஒரு கோட்பாட்டையுடைய நாடுகளை நோக்கி தேசிய மக்கள் சக்தி சரிந்துவிடும் என்பதே ஊகமாகும்.

ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் வெற்றியைத் தொடர்ந்து சர்வதேச ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் அவரது அரசாங்கம் சீனாவையும் ரஷ்யாவையும் நோக்கிச் சாயும் என்று கருத்துக்கு வலுச்சேர்க்கும் பாங்கில் அமைந்திருந்தன. அந்த இரு நாடுகளும் நீண்ட காலமாக இலங்கையின் நெருங்கிய நேச சக்திகளாக இருந்து வருவதுடன் போர்க்காலத்திலும் பிறகு போரின் பின்புலத்தில் கிளம்பிய மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினையிலும் சீனாவும் ரஷ்யாவும் இலங்கைக்கு உறுதுணையாக இருந்து வந்திருக்கின்றன.

ஆனால், ஜனாதிபதி திசாநாயக்க தனது தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளையும் பாதுகாப்பு நலன்களையும் பொறுத்தவரை, இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறார். அவரை முதலில் சந்தித்து வாழ்த்துக் கூறியவர் இந்திய உயர்ஸ்தானிகரே. திசாநாயக்க பதவியேற்ற பிறகு இலங்கைக்கு முதலில் விஜயம் செய்த வெளிநாட்டு அமைச்சரும் இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரேயாவார். அவர் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இந்தியாவுடனான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு இலங்கையின் முன்னுரிமை அக்கறைக்குரிய ஒரு விடயம் என்று ஜனாதிபதி திசாநாயக்க இந்திய அரசாங்கத்துக்கு உறுதியளித்தார். அதேவேளை, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், சீனா மற்றும் ரஷ்யா உட்பட சந்தை வாய்ப்புக்களையும் பொருளாதார உதவிகளையும் வழங்குவதால் இலங்கைக்கு முக்கியமானவையாக விளங்குகின்ற நாடுகளிடம் இருந்தும் உலகம் பூராவும் இருந்தும் நல்லெண்ணச் செய்திகள் வந்து குவிந்தவண்ணமே இருக்கின்றன.

### புதிய தலைமைத்துவம்

அரசாங்கம் விரைவில் அதன் முதன் முதலான வெளியுறவுக் கொள்கைச் சவாலுக்கு முகங்கொடுக்கப் போகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறும் கடப்பாடு, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் கையாளப்படுகின்ற முறை தொடர்பில் இலங்கை மீதான அதன் கண்காணிப்பு மட்டத்தை இவ்வாரம் தீர்மானிக்கவிருக்கிறது.

வடக்கு போர்க்களத்தில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட 2009 ஆண்டில் இருந்து மேற்குலக நாடுகள் தலைமையிலான சர்வதேச சமூகம் கடந்த காலத்தை விசாரணை செய்யுமாறு இலங்கைக்கு நெருக்குதல் கொடுத்து வருகின்றன. போரின் இறுதிக்கட்டத்தில் நடந்தது என்ன என்பது பற்றியும் காணாமல் போனவர்களை கண்டறிதல், மக்களின் காணிகளை திரும்பக் கையளித்தல், வடக்கு, கிழக்கில் இராணுவமய நீக்கம் செய்தல் உட்பட பல்வேறு விவகாரங்களில் பொறுப்புக் கூறப்படுவதை உறுதிப்படுத்து பற்றியும் பிரச்னை இருக்கவே



> முன்னைய அரசாங்கங்களினால் தொடங்கப்பட்ட ஆனால் தொடர்ந்து முன்னெடுக்கப்படாத தேசிய நல்லிணக்கச் செயன்முறையை மீண்டும் முன்னெடுப்தில் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் அரசாங்கம் ஆற்றலை வெளிக்காட்டுமேயானால் அதன் நம்பகத்தன்மை அதிகரிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

செய்கிறது.

2022 அக்டோபரில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பல்வேறு விடயங்களுக்கு மத்தியில், மனித உரிமைமீறல்கள் தொடர்பிலான சான்றுகளைச் சேகரித்து பேணிக் காத்து வைப்பதற்கு மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட ஆணையை நீடிப்பதற்கு தீர்மானித்தது. அதன் நோக்கம் தங்களது நியாயாதிக்கத்தின் கீழ் போர்க்குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு அனுமதிக்கும் நாடுகளில் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதும் நீதிவிசாரணைச் செயன்முறைகளுக்கு ஆதரவளிப்பதுமேயாகும்.

அந்த தீர்மானத்தை ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் உறுதியாக எதிர்த்தன. ஆனால், அவர்கள் முனவைத்த சட்டவாதங்களும் இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் மேம்பட்டிருக்கிறது என்பதைக் காண்பிப்பதற்கு சமர்ப்பித்த சான்றுகளும் ஐக்கிய நாடுகள் முறைமையின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

ஆனால், இந்த தடவை நிலைவரம் வேறுபட்டதாக இருக்கமுடியும் என்பதுடன் இலங்கை அரசாங்கம் பதிலளிக்கின்ற முறையும் வேறுபட்டதாக இருக்கலாம். 2009 ஆம் ஆண்டில் தொடங்கி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுவந்த இதுவரையான காலப் பகுதியில் முதல் தடவையாக போரின்போது இடம் பெற்றதாகக் கூறப்படுகின்ற அத்துமீறல்களில் பங்கேற்றதாக குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு

உறுப்பினரைத் தானும் கொண்டிராத அரசாங்கம் ஒன்று இலங்கையில் பதவிக்கு வந்திருக்கிறது.

தற்போதைய அரசாங்கத்தின் உறுப்பினர்கள் பாதுகாப்பு படைகளை நிலைவைப்பது தொடர்பாகவும் படைபலத்தைப் பயன்படுத்துமாறு உத்தரவிடுவது தொடர்பாகவும் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியதாக அதிகாரப் பதவிகளில் இருந்ததில்லை. 2004 - 2005 காலப்பகுதியில் மாத்திரமே அவர்கள் அமைச்சரவையில் பதவிகளை வகித்தார்கள். அந்த வேளையில் நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்ததுடன் போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஆயுதமோதல்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. அந்த நேரத்தில் இன்றைய ஜனாதிபதி விவசாய, கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக பதவி வகித்தார்.

### வெற்றிக்கதை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானம் இரு வருடங்களுக்கானது. அது இந்த மாதம் முடிவுக்கு வருகிறது. அதில் உள்ள முன்மொழிவுகளில் பெரும்பாலானவை இலங்கை அரசாங்கத்தினால் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அதனால் தீர்மானத்தை காலாவதியாக மேற்குலக நாடுகள் முகாம் அனுமதிக்கப் போவதில்லை என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. மேலும் ஒரு வருடத்துக்கு அதை நீடிப்பதற்கான தீர்மான வரைவு ஒன்று மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

“51/1 தீர்மானத்தின் ஆணையையு அதன் பிரகாரம் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகத்திடம் எதிர்மார்க்கப்படும் சகல பணிகளையும் நீடிம்பதற்கும் தீர்மானிக்கப்படுகிறது. மனித உரிமைகள் பேரவையின் 58 வது கூட்டத்தொடரில் வாய்மூல அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வெளியிடவேண்டும் என்றும் அதைத் தொடர்ந்து 60 வது கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் கடப்பாடு பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது” என்று அந்த வரைவில் கூறப்பட்டிருக்கிறது.

முன்னைய இரு அரசாங்கங்களும் எடுத்த எதிர்முகமான பாதையைத் தொடருவதற்கு பதிலாக, தீர்மானத்தில் உள்ள ஏற்பாடுகளை ஆராய்வதற்கும் அதன் முன்மொழிவுகளின் நடைமுறைப்படுத்தலின் தற்போதைய நிலையை உறுதிப்படுத்திக்கொண்டு அடுத்த வருடத்தில் எவற்றை நடைமுறைப்படுத்தமுடியும் என்பதை தீர்மானிப்பதற்கும் கால அவகாசம் தேவை என்ற ஒரு நிலைப்பாட்டை எடுப்பது புதிய அரசாங்கத்துக்கு நல்ல ஒரு தெரிவாக இருக்கமுடியும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை விடயத்தில் கடைப்பிடித்ததைப் போன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடர்களில் தீர்மானத்துக்கு திருத்தங்களை பிரேரிக்கும் ஒரு நிலைப்பாட்டை திசாநாயக்க அரசாங்கம் எடுக்கலாம். இது இலங்கையும் மனித உரிமைகள் பேரவையும் இணக்கத்துக்கு வரக்கூடிய ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதே பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும். ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து அயைதியான முறையில் இடம்பெற்ற அதிகார மாற்றம் ஐக்கிய நாடுகள் முறைமைக்குள் இலங்கை மீதான நல்லெண்ணத்தை மேலும் அதிகரித்திருக்கிறது.

முன்னைய அரசாங்கங்களினால் தொடங்கப்பட்ட ஆனால் தொடர்ந்து முன்னெடுக்கப்படாத தேசிய நல்லிணக்கச் செயன்முறையை மீண்டும் முன்னெடுப்பதில் புதிய அரசாங்கம் ஆற்றலை வெளிக்காட்டுமேயானால் அதன் நம்பகத்தன்மை மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

தற்போது ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் 57 வது கூட்டத் தொடரின்போது ஒரு பக்கநிகழ்வில் அமெரிக்க தூதுக் குழுவினால் நடத்தப்பட்ட “ சகிப்புத்தன்மையின்மை, வெறுப்புக் குற்றச்செயல்கள் மற்றும் இஸ்லாமியப் பீதியை தோற்கடிப்பது “ தொடர்பில் ஆராயப்பட்டது. அதில் இலங்கையில் சிவில் சமூகத்தினால் செய்யப்பட்ட பணிகளுக்கு விசேடமான அங்கீகாரம் கிடைத்தது. புதிய தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை உலகின் மனச்சாட்சியின் குரலாக விளங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. சர்வதேச நியமங்களில் ஏற்பட்ட சீர்குலைவினால் உலகின் மனச்சாட்சி பெருமளவுக்கு தொந்தரவுக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதற்கு இலங்கை அதன் பங்களிப்பைச் செய்யமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.த.தே...

செயலகத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு தாக்கல் செய்தார்.

இதேபோன்று, மட்டக்களப்பு மாவட்டத்துக்கான வேட்புமனுவை ரெலோ பொதுச் செயலாளர் கோ. கருணாகரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தார். (ஐ)

## தமிழ் மக்கள்...

தோற்றம் பெற்றன.

அந்தக் கட்சியில் தாமதமாக இணைந்த மணிவண்ணன் முதன்மை வேட்பாளராகவும் அவருக்கு ஆதரவானவர்கள் மட்டுமே வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றமையாலும் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்தனர். இதனிடையே, அந்தக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான சிற்பரனுக்கு மட்டுமே தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சிற்பரனை விடவும் அதிக விருப்பு வாக்குகளை பெற்றவர்களும் வேட்பாளர் பட்டியலில் புறமொதுக்கப்பட்டனர். இவ்வாறு தயாரிக்கப்பட்ட வேட்பு மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையிலேயே தமிழ் மக்கள் கூட்டணியின் அதிருப்தி குழு ஒன்று சுயேச்சையாகப் போட்டியிடவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை இந்த அதிருப்திக் குழு வேட்புமனுவை தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழ் அரசு...

நிறைவுறவில்லை என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தேர்தலை சந்திக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ -05)

## ரயில்...

கிணற்றடி வீதியை சேர்ந்த கந்தையா இலங்கேஸ்வரன் (வயது 58) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபரின் பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கின்றனர். தனியாக வசித்து வரும் அவர் சுன்னாகம் - மயிலணியிலுள்ள தனது தாயாரின் வீட்டுக்கு நடந்து சென்றுள்ளார்.

புகையிரத பாதையை அவர் கடக்க முயன்றபோது ரயில் மோதி அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வெளியேறிய...

அதிருப்தியடைந்தவர்கள் சுயேச்சைக் குழுவாக போட்டியிடவுள்ளனர் என்று அறிய வருகின்றது. இந்த சுயேச்சை குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், அந்தக் கட்சியின் மகளிர் அணியை சேர்ந்த விமலேஸ்வரி, ஐ.நாகரஞ்சினி, கரவெட்டி முன்னாள் பிரதேச சபை தவிசாளர் த. ஐங்கரன், புதிய சுதந்திரன் பத்திரிகை உரிமையாளர் அகிலன் முத்துக்குமாரசுவாமி, ஊர்காவற்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் கருணாகரன் நாவலன் ஆகியோருடன் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனும் இந்த சுயேச்சை குழுவில் போட்டியிடவுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இதேவேளை, இந்த சுயேச்சை குழுவில் போட்டியிடுவதற்கு தென்மராட்சியின் க. அருந்தவபாலனை அணுகியுள்ளனர் என்றும் அறியவருகின்றது. இந்த சுயேச்சை குழு நாளை வெள்ளிக்கிழமை தனது வேட்புமனுவை தாக்கல் செய்யும் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

# டியாகோ கார்சியாவில் தங்கியுள்ள 56 ஈழத் தமிழர்கள் ருமேனியாவுக்கு!

லண்டன், ஒக். 10

டியாகோ கார்சியா வில் தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்கள் 56 பேர் தற்காலிகமாக ருமே னியா நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளனர்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படவுள்ள இலங்கைத் தமிழர்கள் ஆறு மாதங்களின் பின்னர் அவர்கள் இங்கிலாந்துக்கு திரும்ப முடியும். அதே சமயம், இவர்களில் பல ருக்கு நிதி ஆதாரங்கள் வழங்கப்பட்டு இலங்கைக்குத் திரும்பிச் செல்ல ஊக்குவிக்கப்படவுள்ளனர்.

பிரிட்டிஷ் வெளிவிவ கார அமைச்சு வட்டாரங்களை ஆதாரம் காட்டி பி. பி. சி. செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தீவிலும் ருவாண்டா நாட்டிலுமாகத் தங்கி யுள்ள இந்த 56 இலங் கைத் தமிழ் அகதிகளின் எதிர்காலம் தொடர்பாக பிரிட்டிஷ் அரசு தீர்வு ஒன்றை எட்டும் வரை அவர்கள் ருமேனியாவில் இயங்கும் ஐக்கிய நாடு கள் சபையின் அகதி முகாமில் தங்கவைக்கப்படுவர் என்று கூறப் படுகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு இந்து சமுத்திரப் பகுதியில் படகு ஒன்றில் பயணித்த பல இலங்கைத் தமிழ் அகதிகள் அவர்களது படகு பழுதடைந்ததை அடுத்து டியாகோ கார்சியா தீவில் கரையொதுங்கி அங்கே புகலிடம் கோரியிருந்தனர்.

இலங்கையில் தங்களுக்கு பாதுகாப்புக் கிடையாது என்று கூறிய அவர்கள் அங்கிருந்து கனடா செல்லும் வழியிலேயே இடையில் கடலில் தத்தளிக்க நேர்ந்தது.

மொறீசியஸ் தீவுக் கூட்டங்களில் அடங்குகின்ற டியாகோ கார்சியா தீவு, பிரிட்டிஷ் நாட்டுக்குச் சொந்தமான இந்து சமுத்திர நிர்வாக பகுதியாகும். பிரிட்டிஷ் - அமெரிக்கா ஆகிய இரண்டு வல்லரசுகளின் படைகளின் இரகசிய கூட்டுப் படைத் தளம் அமைந்துள்ள அந்தத் தீவில் தஞ்சம் கோரிய முதல் வெளிநாட்டவர்கள் இந்த இலங்கைத் தமிழர்களே ஆவர்.

சுமார் 60 வரையான தமிழ் அகதிகள் அங்கு தனிமையான சூழ்நிலையில் தடுப்பு முகாம் ஒன்றில் அடைக்கப்பட்டு வெளியுலகத் தொடர்புகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் சிலர் ருவாண்டா நாட்டில் திறக்கப்பட்ட இடைத் தங்கல் தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டிருந்தனர். தனிமை, விரக்தி காரணமாக அகதிகளில் சிலர் உயிர் மாய்க்கவும் முயற்சித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு வத்திக்கான் ஆதரவளிக்கும்

## அப்போஸ்தலிக்க பிரதிநிதி பிரையன் உடக்வே

கொழும்பு, ஒக். 10

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நீதி - நியாயத்தை வழங்குவதற்காக ஜனாதிபதி அநுரவின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு வத்திக்கான் முழு ஆதரவையும் வழங்கும் என்று இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பிரையன் உடக்வே ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்தித்து உரையாடியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி பணிமனையில் நடந்த இந்த சந்திப்பில் ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமாரவுக்கு தனது வாழ்த்துகளை வத்திக்கான் பிரதிநிதி தெரிவித்தார். அத்துடன், பாப்பரசர் பிரான்சிஸின் வாழ்த்து செய்தியையும் வழங்கினார்.

மேலும், இலங்கையின் எதிர் காலம் குறித்து தனது சாதகமான கருத்தை வெளிப்படுத்திய உடக்வே, மக்கள் எதிர்பார்க்கும் வகையில் நாட்டில் ஏற்கனவே சிறப்பான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என் றும் குறிப்பிட்டார். அது தொடர் பான ஜனாதிபதியின் தொலை நோக்குப் பார்வை மற்றும் அர்ப் பணிப்பைப் பாராட்டிய அவர், அந்த முயற்சிகள் அனைத்துக்கும் வத்திக்கான் ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்ட மிகவும் மோசமான அனுபவமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து தனது வருத்தத்தை தெரிவித்த உடக்வே, அது தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடனும் நம்பகத்தன்மையுடனும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் முயற்சியையும் பாராட்டினார்.



பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நீதி மற்றும் நியாயத்தை வழங்குவதற்காக ஜனாதிபதியின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு வத்திக்கானின் முழு ஆதரவையும் வழங்குவதாக உடக்வே உறுதியளித்தார். (ஐ)

## இலங்கை...

செயலாளர் தெரிவித்தவை வருமாறு,

வன்னி தேர்தல் மாவட்டத்தின் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது. நாளை (இன்று) விவரம் அறிவிக்கப்படும். தலைவர் பதவியிலிருந்து விலகினார் என்று கூறப்படும் மாவை சேனாதிராசாவின் இராஜிநாமா கடிதம் எனக்கு கிடைக்கவில்லை.

இதுபோல, சசிகலா ரவிராஜ், கே. வி. தவராசா ஆகியோர் கட்சியிலிருந்து வெளியேறினர் என்று ஊடகங்கள் மூலமே அறிய முடிகின்றது. அவர்களின் விலகல் கடிதங்கள் எவையும் கிடைக்கவில்லை.

வேறு ஒரு கட்சியின் வேட்பாளராக தேர்தலில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து முற்றாக வெளியேறாமல் இருக்கும் பட்சத்தில் கட்சி யாப்புக்கு அமைய அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இம்முறை தேர்தலில் புதியவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் உள்வாங்கப்பட்டுள்ளனர். விண்ணப்பித்த அனைவருக்கும் கொடுக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைமை எமக்குள்ளது.

இந்தமுறை தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவது தொடர்பில் மத்திய குழுவில் பேசப்பட்டது. ஆனாலும், தற்போதைய களநிலவரங்களின் அடிப்படையில் அங்குள்ள ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக ஆராய்ந்துள்ளோம். அந்த அடிப்படையில் கொழும்பில் இந்தமுறை தமிழ் அரசுக் கட்சி போட்டியிடாது என்ற நிலைப்பாடு எடுக்கப் பட்டுள்ளது - என்றார். (ஐ)

## தமிழ் அரசால்...

தொடர்பில் அவரிடம் எழுப்பப் பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ் வாறு பதிலளித்தார்.

அந்தப் பதிலில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தேர்தல் காலங்களில் தமிழ் அரசுக் கட்சி சமஷ்டி, இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை, ஒற்றையாட்சி எதிர்ப்பு என்று கூறி தமிழ் மக்களின் வாக்குகளை பெறுகின்றது. தேர்தலில் வென்ற பின்னர் தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணைகளை மறந்து தமது இருப்புகளையும் சுயலாப அரசியலையும் மேற்கொள்கின்றது.

அண்மையில், தமிழ் அரசுக் கட்சியின் எம். ஏ. சுமந்திரன், ஜனாதிபதி அநுரவை சந்தித்து மதுபான அனுமதிப் பத்திரங்களை பெற்றவர்களின் பெயர் பட்டியலை வெளியிடுமாறு கோருகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரவை முதன்முதலில் சந்திக்க சென்ற சுமந்திரன், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் அநுரவுடன் பேசாமல் மதுபான அனுமதிப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்களை வெளியிடுமாறு கேட்கிறார்.

பெயர்ப் பட்டியல் வெளியிடுவதை வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை சுமந்திரன் தமிழ் அரசுக் கட்சிக்குள் தனக்கு வேண்டாதவர்களை அப்புறப் படுத்துவதற்கும் தனது இருப்பை தக்கவைப்பதற்குமே மதுபான அனுமதிப் பத்திரங்களை வெளியிடுமாறு கே[illegible] நான் கருதுகிறேன் - என்றும் கூறினார். (ஐ)

# யானை சின்னத்தில் இ.தொ.கா போட்டி

கொழும்பு, ஒக். 10

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக கட்சி மேலிடம் அறிவித்துள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் சக்திவேல் ஆகியோர் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை தொடர்...

46/1 தீர்மானம் காலநீடிப்பு செய்யப்பட்டு 51/1 தீர்மானமாக நீடிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஐ)

## மன்னார்...

தடைப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று புதன்கிழமை குறித்த மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணி நடைபெற்றது. அத்துடன், ஸ்கான் மூலமும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்தப் பணிகளை படம் எடுக்கவோ அல்லது செய்தி சேகரிக்கவோ செய்தியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஹரிணி



கொழும்பு, ஒக். 10

இலங்கையின் பிரதமர் ஹரிணி அமரசூரிய எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

இதற்கான வேட்பு மனுவில் அவர் உத்தியோகபூர்வ மாக கையொப்பமிட்டுள்ளார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் 20 பேர் கொண்ட வேட்பாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கவுள்ளனர். (அ)

## தபால் மூலம் வாக்களிப்பு; காலம் இன்று வரை நீடிப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 10

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில், தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால அவகாசம் இன்று வியாழக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள், கடந்த செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதியில் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதற்கமைய, நேற்று முன் தினம் நள்ளிரவு 12.00 மணிக்கு முதல், தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்த நிலையில் தபால்மூலம் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் கால அகாசம் இன்று நள்ளிரவு 12.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

## புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகள் கட்சி தேர்தலில் சுயேச்சை குழுவாக போட்டி


வவுனியா, ஒக். 10

பாராளுமன்ற தேர்தலில் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சி வன்னி மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாக களமிறங்கியுள்ளது.

பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவினை புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராஜா தலைமையிலான சுயேச்சைக்குழு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று தாக்கல் செய்துள்ளது.

இதன்போது வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (அ)

## நீதிமன்றில் ஆஜராகவில்லை; ஞானசார தேரர் கைதாகுவார்



கொழும்பு, ஒக். 10


பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்து ஆஜர்படுத்துமாறு கோட்டை நீதவான் தனுஜா லக் மாலி உத்தரவிட்டுள்ளார்.

கோட்டை நீதவான் நேற்று புதன்கிழமை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது குர்ஆனையும் இஸ்லாம் மதத்தையும் இழிவுபடுத்தும் வகையில் ஊடகங்களுக்கு தவறான மற்றும் பொய்யான அறிக்கைகளை வெளியிட்டதாக இவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பிலான விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகாதமையால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழில் அதிகளவான டெங்கு தொற்றாளர்!

### கட்டுப்படுத்த ஆரம்ப கட்ட நடவடிக்கை 13ஆம் திகதி முதல் விழிப்புணர்வு செயல்பாடு



யாழ்ப்பாணம், ஒக். 10

**மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துவருவதாக யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சமன் பத்திரண, மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் தொற்று நோய்த்தடுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் தாரணி குருபரன் ஆகியோரும் கருத்து தெரிவித்தனர்.

இங்கு கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரண, வட மாகாணத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையை பூச்சியத்துக்கு கொண்ட வருவதே தமது இலக்கு என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் துரதிஸ்டவசமாக 6 டெங்கு மரணங்கள் பதிவாகின.

அதேபோன்று இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஒரு டெங்கு மரணம் பதிவாகியுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் முதல் இந்த வருடம் ஏப்ரல் வரை அதிகளவான நோயாளர்கள் யாழில் பதிவாகினர்.

வட மாகாணத்தில் டெங்கு மரணங்களைத் தடப்பதே, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையை பூச்சியத்திற்கு கொண்டவருவதே எமது இலக்கு.

டெங்குத் தொற்றுக்குள்ளான ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து பூரணமாக குணமாகி வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் வரை அவரது உயிருக்கு உத்தரவாதம் இல்லை. அவ்வளவுக்கு டெங்கு நோய் ஆபத்தானது. ஆகவே வடக்கு மாகாணத்தில் டெங்கு மரணங்கள் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் பூச்சியமாகக் குறைப்பதற்கான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளோம்.

வட மாகாண ஆளுநர், வட மாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோரின் ஆதரவுடன் இந்த செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம். மழையுடனான காலநிலையால் மீண்டும் அதிகளவிலான நோயாளர்கள் யாழ்ப்பாணத்தில் பதிவாகலாம். இதனால் ஆரம்ப நடவடிக்கையாக எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முதல் மூன்று நாள் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை பிரகடனப்படுத்தியுள்ளோம். மதத் ததலைவர்களின் ஆதரவுடன் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

ஞாயிற்றுக்கிழமை தேவாலயங்களில் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அடுத்த நாள் திங்கட்கிழமை யாழ்.மாநகர சபைக்குட்பட்ட அரச திணைக்களங்களில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆதரவுடன் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சுற்றறிக்கைளின் பிரகாரம் டெங்கு நோய்க் கட்டுப்படுத்தப்பட்டதை உறுதி செய்யும் வகையில் குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

டெங்கு நோயால் அதிகளவில் பாடசாலை மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்பவர்கள் பாதிக்கப்படுவதால்

15ஆம் திகதி செய்வாய்க் கிழமை பாடசாலைகளில் பாடசாலை அதிபர்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்களால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார். (அ)

## 17 கட்சிகள், 16 சுயேச்சை குழுக்கள் இதுவரை வேட்பு மனுக்கள் தாக்கல்

### 246 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம்

கொழும்பு, ஒக். 10

நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக நேற்றுவரை 17 அரசியல் கட்சிகளும் 16 சுயேச்சைக் குழுக்களும் தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதியுடன் வேட்பு மனு தாக்கல் நடவடிக்கைகள் நிறைவடையவுள்ளன.

இதேவேளை நேற்று முன் தினம் வரை 246 சுயேச்சைக் குழுக்கள், கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் அதிகளவு குழுக்கள் வைப்புகளை செய்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## பாராளுமன்ற தேர்தலை அவதானிப்பதற்கு 8 நாடுகளில் இருந்து கண்காணிப்பாளர்கள்



கொழும்பு, ஒக். 10

பாராளுமன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக 08 நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சார்க் நாடுகள் மற்றும் ரஷ்யாவில் இருந்து கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வருவதாக ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக பொது நலவாய தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களும் இலங்கைக்கு விஜயம் செய்து பொதுத் தேர்தல் நடவடிக்கைகளை அவதானிக்கவுள்ளனர்.

மேலும், பொதுத் தேர்தலை கண்காணிக்க ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பார்வையாளர்களும் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org